O.S.No. 22/2014
03.03.2020

வா.சா.2.திரு.விஜயன் த.பெ.ராமையா அம்பலம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.
1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை .

நான் சந்தைப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். சந்தை பேட்டைக்கும் கூத்தப்பன்பட்டிக்கும் சுமார் 2 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1964ம் வருடம். வாதிகளுக்கும், எனக்கும் என்ன உறவுமுறை என்றால் மாமன், மைத்துனர் உறவுமுறை ஆகும். வாதிகள் மொத்தம் எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் தெரியாது. எந்தெந்த சொத்துக்கள் எந்தெந்த வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது, சமாதி சொத்து பற்றி மட்டும் தான் தெரியும், அதை வாதிகள் அனுபவித்து வருகிறார்கள். 20.11.1934 தேதியிட்ட உயிலின் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த உயிலை எழுதிய வீரணனுக்கு உயிலில் கண்ட சொத்துக்கள் எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வீரணன் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வீரணன் சமாதியில் அவரது இறந்த தேதியில் அன்னதானம் நடத்துவார்கள் என்ற விவரம் மட்டும் தெரியும் என்றால் சரிதான். அந்த சமாதி எந்த புல எண்ணில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1 மற்றும் 2 பிரதிவாதிகளை தெரியும் என்றால் தெரியும், அவர்கள் எனக்கு மாமன் முறை. பிரதிவாதிகள் உரிமை கோரும் சொத்துக்களை அவர்கள் கிரயம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான் என்று சாட்சி கூறிவிட்டு, பின்னர் தெரியாது என்று சொல்கிறார். சமாதி இருக்கும் சொத்துக்கள் பொறுத்து, அதில் நடைபெறும் அன்னதானத்தை பொறுத்தோ 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு எந்த விதமான அக்கரையும் கிடையாது என்றால் அது பற்றி தெரியாது. எனது சாட்சியம் 1 மற்றும் 2 பிரதிவாதிகளை பொறுத்து ஏற்கத்தக்கதல்லது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில், எந்தெந்த சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றும், எந்தெந்த சொத்துக்கள் பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்ற விவரமும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். (12ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் 12ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வா.சா. 2 ன் சாட்சியம் ஒத்தி வைக்கப்படுகிறது.)